

அரசு முறைப் பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு செல்வதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.05.2023) முகாம் அலுவலகத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கௌதம சிகாமணி எம்.பி., நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், அண்ணா அறிவாலய துணை மேலாளர் என்.ஜெயக்குமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023 நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நிதியுதவியாக முதற்கட்டமாக ரூ.1.50 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் சேர்மன் சாம்பியன் ஷிப் கமிட்டி என்.இராமச்சந்திரன் அவர்களிடம் நேற்று முன்தினம் (22.05.2023) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பொது மேலாளர் (நிர்வாகம்) வே.மணிகண்டன், அரசு அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழிவுநீர்த் தொட்டிகள் - பாதாளச் சாக்கடைகளில் இறப்புகள் ஏற்படாத வகையில் - தொடர்புடைய துறை சார்ந்த

# அலுவலர்கள் அனைவரும் அர்ப்பணிப்பு - மனிதநேய உணர்வுடன் சிறப்பாகச் செயல்படுவீர்!

## தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்பு வேண்டுகோள்!

**சென்னை, மே 24 –**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (22.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் கழிவுநீர்த் தொட்டிகள் மற்றும் பாதாளச் சாக்கடைகளில் ஏற்படும் இறப்புகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள் ‘‘கழிவுநீர்த் தொட்டிகள் மற்றும் பாதாளச் சாக்கடைகளில் இறப்பு ஏற்படும் சூழ்நிலைகளுக்கு இடம் அளிக்காத வகையில், தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும், அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய மனிதநேய உணர்வுடன் இப்பணியில் கவனமாகவும் சிறப்பாகச் செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறேன்’’ என்று அன்பு வேண்டுகோள் விடுத்தார்.**

இக்கூட்டத்தில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு : -

தமிழ்நாடு பல்வேறு சமூக பொருளாதார குறியீடுகளில் வளர்ச்சி பெற்ற மாநிலமாக இருந்தாலும், ஒரு குறியீட்டில் மட்டும் பின்தங்கிய நிலையில் உள்ளது. அது என்னவென்றால், கழிவு நீர்த் தொட்டிகளைச் சுத்திகரிக்கும்போது, உயிரிழக்கும் நபர்களின் எண்ணிக்கை தான். அது குறித்த செய்திகள் நமக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றன. அதனைத் தவிர்க்க வேண்டிய கடமையும் பொறுப்பும் இந்த அரசுக்கு உள்ளது.

தமிழ்நாட்டில், தொழில் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நாம் முன்னணியில் இருக்கிறோம். அப்படியிருக்கும்போது, நம்மால் ஏன் இந்த அவலநிலையை மாற்ற முடியவில்லை என்பதை நாம் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாதாளச் சாக்கடைகளையும், கழிவுநீர்த் தொட்டிகளையும் மனிதர்களே சுத்தம் செய்யும் நடைமுறை மானுடத்திற்கே களங்கமாய் விளங்குகிறது.

கழிவுநீர்த் தொட்டிகளை சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்தவர்களின் விவரங்களை சமீபத்தில் ஆய்வு செய்தேன். இத்தகைய இறப்புகள் பெரும்பாலும், நகரப் பகுதிகளில் நடைபெறுகின்றன.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்!**

கழிவுநீர்த் தொட்டிகளை சுத்தம் செய்யும்போது அப்பணியாளர்கள் உயிரிழக்கும் நிலையை மாற்றுவதற்காகத் தான், இப்பணியை இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ள கடந்த 20.2.2023 அன்று தலித் இந்தியன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீ என்னும் அமைப்புடன் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் என் முன்னிலையில் கையெழுத்தானது.

கடந்த பட்ஜெட் உரையில், இந்தப் பணியில் ஈடுபடுவோர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் பொருட்டு, “அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்” என்ற புதிய திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக, சென்னை பெருநகரப் பகுதியில் நவீன இயந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்தி, தூய்மைப் பணியாளர்களைத் தொழில்முனை வோர்களாக மாற்றி, கழிவு நீர்த் தொட்டிகளை சுத்தம் செய் யும் பணியில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

> **“இனிமேல் எந்தவொரு இறப்பும் கழிவுநீர் சுத்திகரிப்பால் ஏற்படக் கூடாது!”**

இந்தத் திட்டத்தினை அடுத்த நான்கு மாதங்களில் முழுமையாக செயல்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்று நகராட்சி நிர்வாகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்தப் புதிய திட்டத்திற்காகக் காத்திராமல், இனிமேல் தமிழ்நாட்டில் எந்தவொரு இறப்பும், கழிவுநீர் சுத்திகரிப்பால் நேரக்கூடாது என்பதை மனதில் கொண்டு, நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பேரூராட்சித் துறை அலுவலர்கள் செயல்பட வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**உயிரிழப்புகளுக்கான இழப்பீடு!**

இதுபோன்ற நிகழ்வுகளால் உயிரிழப்புகளுக்கான இழப்பீடு வழங்குவதிலும் குற்றவியல் நடவடிக்கைகளிலும் வேறுபாடுகள் காணப்படுகிறது. சில இனங்களில் இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகளில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் சில இனங்களில் Prohibition of Employment of Manual Scavengers Act சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இதுபோன்ற உயிரிழப்புகள் நிகழும்போது, அவற்றை எப்படிக் கையாளவேண்டும், என்னென்ன நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவேண்டும் என்பதற்கு ஒரு நெறிமுறை வகுக்கப்படவில்லை என்பது தெரிகிறது.

இந்த இறப்புகளைத் தவிர்க்கும்பொருட்டு, விரைவில் முறையான வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டுமென்று, கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இந்தப் பணியில் ஈடுபடுபவர்களிடமும், இப்பணியில் தூய்மைப் பணியாளர்களை ஈடுபடுத்துவோர்களிடமும், என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைபிடிக்க வேண்டுமென்று ஒரு விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும். அனைத்துத் துறைகளிலும் சிறப்பாக செயல்படும் நமது மாநிலம், இந்தத் துறையில் மட்டும் பின்தங்கியுள்ளது குறித்து உண்மையிலேயே நான் மிகுந்த கவலை கொள்கிறேன். மேலும், நமது அலுவலர்களும் இத்தகைய பணிகளில் போதிய கவனம் செலுத்தத் தவறிவிடுகிறார்கள் என்றும் நான் எண்ணுகிறேன்.

இனி வருங்காலங்களில், தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தவறி, அதன் வாயிலாக, இறப்புகள் நேருமானால் அதற்குக் காரணமான அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற சூழ்நிலைகளுக்கு இடம் அளிக்காத வகையில் தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும், இதில் அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய மனிதநேய உணர்வுடன் இப்பணியில் கவனமாகவும், சிறப்பாக வும் செயல்பட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் மட்டும்

# தி.மு.கழக ஆட்சியில் 14 லட்சத்துக்கும் மேற்பட்ட புதிய வேலை வாய்ப்புகள்!

## பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு தகவல்!

சென்னை, மே 24 -

2022 - 23 நிதியாண்டில் தமிழ்நாட்டின் முறைசார் துறையில் 14 லட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் பதிவுத் தரவு காட்டுகிறது.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக 18 - 21 வயதுக்குட்பட்டவர்களுக்கான 3,76,872 வேலைகள் உருவாக்கப்பட்டன. உற்பத்தி, மின்னணு வியல் மற்றும் ரியல் எஸ்டேட் போன்ற பிரிவுகள் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டன

2022-23 நிதியாண்டில் (FY) தமிழ்நாட்டின் முறைசார் துறையில் 14,05,171 வேலைகள் உருவாக்கப்பட்டன, இது 2021-22 நிதியாண்டில் 12,84,986 வேலைகளாக இருந்து சுமார் 9.4% அதிகரித்துள்ளது.

பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் (EPFO) செய்யப்பட்ட புதிய நிகர பதிவுகளின் எண்ணிக்கையில் வேலை உருவாக்கம் அளவிடப்படுகிறது. 2022-23 நிதியாண்டுக்கான தற்காலிக ஊதியத் தரவை மே 20 அன்று EPFO வெளியிட்டது. தமிழ்நாட்டில், 18- 21 வயதுக்குட்பட்டவர்களில் அதிகபட்சமாக காணப்பட்டது, 2022-23 இல் 3,76,872 வேலைகள் உருவாக்கப்பட்டன. . 22-25 வயதிற்குட்பட்ட பிரிவில், 2022-23ல் 3,6,8981 பணிகளும், 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் 2,44,891 பணிகளும் சேர்க்கப்பட்டன.

29-35 வயதிற்குட்பட்ட பிரிவில், 2,35,006 வேலைகள் சேர்க்கப்பட்டன, அதைத் தொடர்ந்து 2628 வயது வரம்பில் 1,63,658 வேலைகள் சேர்க்கப்பட்டனர், தரவு காட்டுகிறது. 2022-23ல் 18 வயதுக்கு குறைவானவர்கள் 15,763 வேலைகளை கூடுதலாகக் பெற்றனர். தேசிய அளவில், 2022-23ல் EPFO ஆல் சுமார் 1.39 கோடி நிகர உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர், இது 2021-22ல் 1.22 கோடி நிகர உறுப்பினர்களில் இருந்து 13.22% அதிகரித்துள்ளது.

உற்பத்தி, மின்னணு வியல் மற்றும் ரியல் எஸ்டேட் போன்ற பிரிவுகள் மாநிலத்தில் சிறப்பாக செயல்பட்டன. இருப்பினும், உலகளாவிய காரணிகளால் ஜவுளி மற்றும் தோல் போன்ற முக்கிய வேலை வாய்ப்பை உருவாக்கும் துறைகளில் அழுத்தம் உள்ளது என்று பொன் ப்யூர் கெமிக்கல்ஸ் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரும், MSME மற்றும் எளிதாக செய்வதற்கான இந்திய தொழில் கூட்டமைப்பு துணைக்குழுவின் தலைவருமான எம். பொன்னுசாமி கூறினார்.

மார்ச் மாதத்தில், அதிகபட்ச நிகர உறுப்பினர் சேர்க்கைக்கான முதல் ஐந்து மாநிலங்கள் மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடகா, ஹரியானா மற்றும் குஜராத் ஆகும். இந்த மாநிலங்கள் இணைந்து 58.68% உறுப்பினர்களை சேர்த்துள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மார்ச் மாதத்தில் அனைத்து மாநிலங்களிலும், மகாராஷ்டிரா 20.63% நிகர உறுப்பினர்களைச் சேர்த்து அட்டவணையில் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பங்களிப்பு 10.83% என்றும் அது மேலும் கூறியது.

EPFO தரவு முறையான வேலைவாய்ப்பின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே உருவாக்குகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ். இயக்குநர் கே.ஆர்.சண்முகம் தெரிவித்தார். ஊழியர்களின் பதிவுகளை புதுப்பித்தல் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருப்பதால், ஊதிய தரவு தற்காலிகமானது. அதனால் ஒவ்வொரு மாதமும் தரவு புதுப்பிக்கப்படும் என்று தொழிலாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2022-23 ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் 13.2% ஆக இருந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் நிகர வளர்ச்சி 9.4 சதவிகிதம் ஆக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# டெல்லியில் இருந்து சண்டிகர் வரை லாரியில் பயணித்த ராகுல்காந்தி!

புதுடெல்லி, மே 24 -

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி நேற்று முன்தினம் நள்ளிரவு லாரியில் டெல்லியில் இருந்து சண்டிகர் வரை பயணம் மேற்கொண்டார்.

ராகுல்காந்தி கடந்த ஆண்டு செப்டம்பர் இந்திய ஒற்றுமை நடைபயணம் மேற்கொண்டார். கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை நடந்த இந்திய ஒற்றுமை நடைபயணம் கடந்த ஜனவரி மாதம் நிறைவடைந்தது. இதனை தொடர்ந்து கர்நாடக தேர்தலின் போதும் ராகுல் காந்தி பைக்கில் சென்று டெலிவரி பாய்களுடன் உரையாடினார். பஸ்சில் பயணித்து பயணிகளுடன் உரையாடினார்.

இந்நிலையில், ராகுல்காந்தி நேற்று முன்தினம் நள்ளிரவு டெல்லியில் இருந்து சண்டிகர் வரை லாரியில் சென்றார். அவர் லாரி டிரைவருடன் உரையாடியபடி பயணம் மேற்கொண்டார். லாரியில் ராகுல்காந்தி பயணம் செய்யும் வீடியோவை வெளியிட்ட காங்கிரஸ், லாரி டிரைவர்களின் பிரச்சினைகளை தெரிந்து கொள்ள அவர் பயணம் மேற்கொண்டார்.

‘இந்திய சாலைகளில் 90 லட்சம் லாரி டிரைவர்கள் உள்ளனர். அவர்களுக்கென்று பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. ராகுல்காந்தி லாரி டிரைவரின் மனதின் குரலை கேட்கிறார்’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அகரம் பகுதியில் நடைபெற இருக்கும் அகழாய்வு பணிகளை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. துவக்கி வைத்தார். இந்நிகழ்வின் போது 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் திருநெல்வேலி மாவட்ட அளவில் முதலிடம் பிடித்த, வல்லநாடு பகுதியைச் சேர்ந்த அர்ஜுன் பிரபாகர் என்ற மாணவருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்து, நிதியுதவி வழங்கினார். உடன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, இந்திய தொல்லியல்துறை திருச்சி மண்டல இயக்குநர் அருண்ராஜ், ஒன்றியச் செயலாளர் ராமசாமி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### அரசுப் பள்ளிகளில் முதன்மை பெற்ற

# மாணவி இலக்கியாவிற்கு அமைச்சர் பெரியகருப்பன் நிதி உதவி!

சிவகங்கை, மே 24 -

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி இலக்கியா அரசுப்பள்ளிகளில் முதன்மை மதிப்பெண் பெற்றுள்ளதை பாராட்டி கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் ரூ25ஆயிரம் நிதி உதவி செய்தார். பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சி வெளியீடு மே19ந்தேதி வெளியானது.

இத்தேர்வு முடிவுகளில் அரசுப் பள்ளிகளில் படித்த மாணவ,மாணவிகளில் சிவகங்கை மாவட்ட அளவில் மானாமதுரை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி இலக்கியா 593மதிப்பெண் எடுத்து முதன்மை பெற்றுள்ளார். இவரைப் பாராட்டி கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் மானாமதுரை நியூ வசந்தநகர் பகுதியில் வசிக்கும் மாணவி இலக்கியா வீட்டிற்குச் சென்றார். வீட்டிலிருந்த இலக்கியாவை அமைச்சர் பெரிய கருப்பன் பாராட்டி வாழ்த்தினார்.

மேலும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசிரவிக்குமார்,திருப்-புவனம் பேரூராட்சித் தலைவர் சேங்கைமாறன், நகர் செயலாளர் பொன்னுச்சாமி, ஒன்றிய செயலாளர் ராஜாமணி, ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர் முத்துச்சாமி மற்றும் பலர் வாழ்த்தினார்கள்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாவட்டப் பொருளாளர் பாலமுருகன், மானாமதுரை கிளைத் தலைவர் தேவதாஸ்,கிளை செயலாளர் ரசீந்திரகுமார் ஆகியோர் மாணவி இலக்கியாவை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்கள்.